tamilguru.lk



**வர்த்தக, வணிக, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு**

**அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம்**

## அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் அளவீட்டு சேவைகள் மற்றும் உபகரணங்கள் பரிசோதகர் பதவியில் பயிற்சித் தரத்திற்கான ஆட்சேர்ப்புச் செய்யும் திறந்த போட்டிப் பரீட்சை - 2025

Open Competitive Examination for the Recruitment to the Trainee Grade of the Posts of Inspectors of Measurement Services and Devices of the Sri Lanka Technological Service of Department of Measurement Units, Standards and Services -2025

அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தினால் இலங்கை தொழில்நுட்ப சேவையின் III தரத்தின் அளவீட்டு சேவைகள் மற்றும் உபகரணங்கள் பரிசோதகர் பதவிற்காக ஆட் சேர்ப்புச் செய்வதற்கு 2026, நவெம்பர் மாதம் நடத்தப்படவிருக்கும் திறந்த போட்டிப் பரீட்சைக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

- ❖ விண்ணப்பங்களை இலங்கை பரீட்சைத் திணைக் களத்தின் www.doenets.lk வலைத் தளத்தின் "Our Services" கீழ் காணப்படும் "Online Applications – Recruitment Exams/ E.B. Exams" இல் பிரசுரிக்கப்பட்டுள்ளதோடு விண்ணப்பங்களை நிகழ்நிலையில் (Online) மாத்திரமே சமர்ப்பிக்க முடியும். நிகழ்நிலை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் செயற்பாடு 2026, ஓகத்து மாதம் 10 ஆம் திகதி மு.ப. 9.00 மணிக்கு ஆரம்பிக்கப்படுவதோடு 2026, செத்தெம்பர் மாதம் 04 ஆம் திகதி பி.ப. 9.00 மணியுடன் முடிவடையும்.
- ❖ தற்போது அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில் பணிபுரியும் அதிகாரிகள் விண்ணப்பத்தின் ஒரு பிரதியை தமது தனிப்பட்ட கோவையில் சேர்ப்பதற்காக நிறுவனத் தலைவரிடம் ஒப்படைக்க வேண்டியதோடு, நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கும் போது நிறுவனத் தலைவரினால் உறுதி செய்யப்பட்ட விண்ணப்பத்தின் ஒரு பிரதியும், சேவையை உறுதிப்படுத்தும் கடிதம் ஒன்றும் சமர்ப்பிக்க வேண்டும்.
- ❖ விண்ணப்பம் சமர்ப்பிக்கும் இறுதி நாள் வரை தாமதிப்ப தனால் ஏற்படக்கூடிய எந்தவொரு பாதகமான நிலை மையையும் விண்ணப்பதாரியே பொறுப்பேற்க வேண்டும்.

01. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும்:**

    I. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரியது மாகும். விதவை/ தபுதாரர் மற்றும் அநாதைப் பிள்ளைகளின் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்ய வேண்டும்.

    II. இந்நியமனம் மூன்று வருட தகுதிகாண் காலத்தைக் கொண்டதாகும்.

    III. அரச மொழிக் கொள்கைக்கேற்ப அரச நிர்வாகச் சுற்றறிக்கை 18/2020 இற்கு அமைவாக உரிய காலத்திற்குள் அரச மொழித் தேர்ச்சியைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

02. **சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் :**

பயிற்றுவிக்கும் தரம் :

முதலாம் ஆண்டு - ரூபா 43,274.00 மாதாந்தக் கொடுப் பனவு

2 ஆம் ஆண்டு - ரூபா 45,770.00 மாதாந்தக் கொடுப்பனவு

**பதவிக்குரிய மாதாந்தச் சம்பள அளவுத் திட்டம்** :

அளவீட்டு சேவைகள் மற்றும் உபகரணங்கள் பரிசோதகர் அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல. 10/2025 இன் கீழ் MN 3-2025 ரூபா 52,250 -10 x 800 - 11 x 1,190 -10 x 1,320 - 10 x 1,350 - ரூபா 100,040 ஆவதோடு அச் சுற்றறிக்கையின் அட்டவணை II இன் ஏற்பாடுகளுக்கமைய நியமனம் அமுலாகும் திகதி யிலிருந்து சம்பளம் வழங்கப்படும்.

பதவியின் III ஆம் தரத்திற்கு இணைக்கப்பட்டு 03 வருடங்களுக்குள் முதலாவது தடை தாண்டல் பரீட்சை யிலும், II ஆம் தரத்திற்கு நியமனம் பெற்று 03 வருடங் களுக்குள் II ஆம் தடை தாண்டல் பரீட்சையிலும், முதலாம் தரத்திற்கு நியமனம் பெற்று 05 ஆண்டுகளுக்குள் III ஆம் தடை தாண்டல் பரீட்சையிலும் சித்தியடைய வேண்டும்.

03. **கல்வித் தகைமைகள்:**

இணைந்த கணிதம், உயர் கணிதம், பௌதிகவியல், இரசாயனவியல், உயிரியல் மற்றும் விவசாயம் ஆகிய பாடங்களுள் பௌதிகவியல், இணைந்த கணிதம் அல்லது உயர் கணிதம் உள்ளடங்களாக க.பொ.த(உ.த) பரீட்சையில் ஒரே தடவையில் 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

அல்லது

பழைய பாடத் திட்டத்தின் கீழ் பௌதிகவியல் மற்றும் பிரயோக கணிதம் அல்லது தூய கணிதம் ஆகிய பாடங்களில் ஒன்று உள்ளடங்களாக ஒரே தடவையில் 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஏதேனும் இன்னொரு பாடத்தில் சிறப்பு சித்தியுடன் க.பொ.த. (சா.த) பரீட்சையில் ஒரே தடவையில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

04. **வேறு தகைமைகள்:**

I. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

II. விண்ணப்பம் கோரும் இறுதித் திகதிக்கு வயது 18-30 க்கு இடையிலாக இருத்தல் வேண்டும். (அதன் பிரகாரம் 2008.09.04 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பும் 1996.09.04 ஆந் திகதி அல்லது அதற்கு பின்பும் பிறந்தவர்கள் மாத்திரம் இதற்காக விண்ணப்பிக்கும் தகைமையைப் பெறுவார்கள். தற்போது அரச சேவையில் உள்ளோருக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.)

III. விண்ணப்பதாரர்கள் சிறந்த நன்னடத்தயையும் சிறந்த உடற்தகைமையையும் கொண்டிருத்தல் வேண்டும்.

05. **ஆட்சேர்ப்புச் செய்யும் முறை:**

மேற்படி தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்ப தாரிகள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

இரண்டாண்டு கால கோட்பாடு ரீதியான மற்றும் செயன்முறை பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்தி செய்ததன் பின், திணைக்களத் தலைவரினால் வழங்கப்படும் தேர்ச்சிச் சான்றிதழைப் பெறும் தகுதி அடைவதோடு ஆட்சேர்ப்புத் தரமான III ஆம் தரத்திற்கு இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

பரீட்சையில் சித்தியடைவதற்காக ஒவ்வொரு பாடத்திலும் 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற வேண்டும். அவ்வாறு புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரர்களின் மொத்தப் புள்ளிகளின் திறமை வரிசைப்படி ஆட்சேர்ப்புச் செய்யப்பட வேண்டிய எண்ணிக்கையில் இரு மடங்கான பரீட்சார்த்திகளின் பெறுபேறுப் பட்டியலொன்று அவர்களின் தகைமைகளைப் பரிசீலனை செய்வதற்காக அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளரிடம் வழங்கப்படும். நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. தகைமைகளைப் பூர்த்தி செய்த, இரண்டு பாடங்களிலும் உச்சப் புள்ளிகளைப் பெற்ற விண்ணப்ப தாரிகள் பயிற்சி வகுப்பில் சேர்த்துக் கொள்ளப் படுவார்கள். பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண் ணப்பதாரர்களின் பெறுபேறுகளை அவர்களுக்கு அறிவித்தல் அல்லது www.results.exams.gov.lk வலைத்தளத்தில் பிரசுரிக்கும் செயற்பாடு எனது இணக் கத்தின் பின்னர் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் செய்யப்படும். பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளரின் முடிவு இறுதி முடிவாகும்.

06. இப் பரீட்சை பின்வரும் நகரங்களில் நடாத்தப்படும். விண்ணப்பதாரர்கள் தான் வசிக்கும் விலாசத்திற்கு அண்மித்த நகரத்தைத் தமது பரீட்சை நிலையமாகத் தெரிவு செய்ய வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் நகரம் மற்றும் நகர எண்ணைக் கீழே தரப்பட்டுள்ள அட்டவணைக்கு அமைவாக விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும். விண்ணபபித்த நகரத்தைப் பின்னர் மாற்று வதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 02 |
| காலி | 03 |
| யாழ்ப்பாணம் | 04 |
| மட்டக்களப்பு | 05 |
| குருணாகல் | 06 |
| அனுராதபுரம் | 07 |
| பதுளை | 08 |
| இரத்தினபுரி | 09 |

உத்தேசிக்கப்பட்டுள்ள நகரங்கள் அனைத்திலும் அல்லது பெரும்பாலானவற்றில் பரீட்சை நிலையங்களை அமைப்பதற்குப் போதியளவிலான விண்ணப்பதாரர்கள் இல்லாத சந்தர்ப்பத்தில் பரீட்சையைக் கொழும்பில் மாத்திரம் நடாத்துவதற்குப் பரீட்சை ஆணையாளர் நாயகம் நடவடிக்கைகளை மேற்கொள்வார்.

07. **எழுத்துப் பரீட்சை:**

பரீட்சை சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பித்த மொழி மூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது. ஒரு விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து வினாத்தாள்களுக்கும் விண்ணப்பித்த மொழி மூலமே விடையளிக்க வேண்டும்.

பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டதாகும்.

(1) **நுண்ணறிவுச் சோதனை :**

நேரம் 01 மணித்தியாலம். மொத்தப் புள்ளிகள் 100. விண்ணப்பதாரரின் பகுத்தறிவு, சிந்தனைத் திறன், பகுப்பாய்வுத் திறன் மற்றும் முடிவெடுக்கும் திறன் ஆகியவற்றை மதிப்பிடுவதற்காக 50 பல் தேர்வு மற்றும் குறுகிய வினாக்கள்; உள்ளதோடு அனைத்து வினாக்களுக்கும் விடயளிக்க வேண்டும்.

(2) **தொழில்நுட்ப வினாத்தாள் :**

நேரம் 02 மணித்தியாலம். மொத்தப் புள்ளிகள் 100. பௌதீக அளவீடுகளை மதிப்பிடல் மற்றும் செயன்முறைப் பௌதிகவியல் தொடர்பான அறிவைப் மதிப்பிடுவதற்கான ஒரு வினாத் தாளாகும். க.பொ.த உயர் தரத்திலான அறிவு இதற்குப் போதுமானதாகும். அனைத்து வினாக் களுக்கும் விடையளிக்க வேண்டும்.

08. **விண்ணப்பிக்கும் முறை :**

நிகழ்நிலை (online) பரீட்சை விண்ணப்பங்களை ஆங்கில மொழியில் மாத்திரம் பூர்த்தி செய்ய வேண்டும். விண்ணப்பதாரரால் நிகழ்நிலையில் சமர்ப்பிக்கப்பட்ட மென்பிரதி செல்லுபடியான விண்ணப்பமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது அல்லது ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பது திணைக்களத்தினால் நீங்கள் இணயத்திற்குப் பிரவேசிக்கப் பயன்படுத்திய கையடக்கத் தொலை பேசிக்கு குறுஞ்செய்தி (SMS) மூலமாக அல்லது மின்னஞ்சல் (E-mail) விலாசத்திற்கு அறிவிக்கப்படும். நிகழ்நிலை விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காகத் தயாரிக்கப் பட்டுள்ள அறிவுறுத்தல் தாளைப் (Instructions) பதிவிறக்கம் செய்து கொள்ளவும். விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்யும் போது அவ் அறிவுரைகளைச் சரியாகப் பின்பற்றவும். பூரணமற்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

09. பரீட்சைக் கட்டணம் ரூபா 600.00 ஆகும். பரீட்சைக் கட்டணம் செலுத்தும் போது நிகழ்நிலைத் தொகுதியில் வழங்கப்படும் பின்வரும் கட்டணம் செலுத்தும் முறைமைகளினூடாக மாத்திரம் செலுத்த வேண்டும்.

I. எந்தவொரு வங்கிக் கடனட்டையினூடாக (Any Bank Credit Card)

II. இணைய வழி செலுத்தும் வசதிகளைக் கொண்ட எந்தவொரு வங்கிப் பற்று அட்டையினூடாக (Any Bank Debit Card with the Facility of Internet Transactions)

III. இலங்கை வங்கி ஒன்லைன் வங்கி முறைமை யினூடாக (Online Banking Method of Bank of Ceylonn)

IV. எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையினூடாகவும் (Any Branch of the Bank of Ceylon)

குறிப்பு:

(அ) மேற்கூறப்பட்ட முறைகளில் பணம் செலுத்தும் விதம் குறித்த அறிவுரைகள், பரீட்சைக்கான தொழில்நுட்ப அறிவுரைகளின் கீழ் இணையத்தளத்தில் வெளி யிடப்பட்டுள்ளன.

(ஆ) கட்டணம் கிடைத்தமை தொடர்பாகக் குறுஞ் செய்தியூடாகவோ (SMS) மின்னஞ்சலூடாகவோ அறிவிக்கப்படும். மொத்தப் பரீட்சைக் கட்டணத் தையும் முழுமையாகச் செலுத்த வேண்டியதோடு கட்டணம் குறைவாகவோ அதிகமாகவோ செலுத்தப்பட்டுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக் கப்படும். மேற்கூறப்பட்ட கட்டணம் செலுத்தும் முறைமைகளினூடாகப் பரீட்சைக் கட்டணம் செலுத்தும் போது ஏற்படும் தவறுகள் தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பொறுப் பேற்காது.

(இ) எந்தவொரு காரணத்தினாலும் பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட கட்டணம் மீளச் செலுத்தப்படவோ அல்லது வேறொரு பரீட்சைக்கு மாற்றப்படவோ மாட்டாது.

10. வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதி களைப் பூர்த்தி செய்தோர் மாத்திரமே விண்ணப்பித் துள்ளனர் என்ற அடிப்படையில் விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதி திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்களுக்குப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நிகழ்நிலையூடாகப் பரீட்சை அனுமதி அட்டைகள் வழங்கப்படும். பரீட்சை அனுமதி அட்டைகள் வெளியிடப்பட்டதும், இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் இணைய அறிவித்தல் அல்லது குறுஞ்செய்தி மூலம் பரீட்சார்த்திகளுக்கு அறிவிக்கப்படும். தமது பரீட்சை அனுமதியட்டை கிடைக்காத ஒரு விண்ணப்பதாரர் இருப்பின், அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நிறுவனப் பரீட்சைக் கிளையில் அது குறித்து விசாரிக்க வேண்டும். அத்தகைய விசாரணைகளை மேற்கொள்ளும் போது, விண்ணப்பதாரர் தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை எண் மற்றும் முகவரி ஆகியவற்றைச் சரியாகக் குறிப்பிட்ட கோரிக்கைக் கடிதமொன்றை வலைத்தள அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்குச் சமர்ப்பித்து விசாரிப்பது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அவ்வாறு விசாரிக்கும் போது பரீட்சைத் திணைக்களத்தால் கோரப்படும் ஏதேனும் தகவலை உறுதிப் படுத்துவதற்காகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் நிழல் பிரதியொன்றை உங்களிடம் வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும். அனுமதி அட்டையை சரிபார்த்த பிறகு, ஏதேனும் திருத்தங்கள் இருப்பின் முன்கூட்டியே பரீட்சைத் திணைக்களத்தைத் தொடர்பு கொண்டு, விண்ணப்பத்தின்படி திருத்தங்களைச் செய்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்தில் திருத்தங்களுக்காகச் செய்யப்படும் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட மாட்டாது.

11. பரீட்சை அனுமதியட்டையில் விண்ணப்பதாரரின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். ஒரு அரச நிறுவனத்திலிருந்து விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர் தமது கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அதிகாரி ஒருவரினாலும், ஏனைய விண்ணப்பதாரர்கள் தமது கையொப்பத்தைத் தமது பிரிவின் கிராம உத்தியோகத்தர், அரச பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்திய ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு அல்லது ஒரு பௌத்த விகாரையின் தலைமைத் தேரர் அல்லது வேறு சமயத்தின் வணக்கஸ்தலத்திற்குப் பொறுப்பான தலைமை மதகுரு பதவியை வகிக்கும் ஒருவரினால் உறுதி செய்திருத்தல் வேண்டும்.

12. ஒரு விண்ணப்பதாரிக்குப் பரீட்சை அனுமதியட்டை அனுப்பப்படுதல் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அல்லது பதவிக்காகத் தெரிவு செய்யப்படுவதற்குத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதாக ஏற்றுக் கொண்டதாகக் கருதக் கூடாது.

13. பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தான் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியடையும் விதத்தில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். அதற்காகப் பின்வரும் ஆவணங்கள் மாத்திரம் செல்லுபடியாகும்.

(I) ஆட்பதிவுத் திணைக்களத் தேசிய அடையாள அட்டை
(II) செல்லுபடியாகும் கடவுச் சீட்டு
(III) செல்லுபடியாகும் இலங்கைச் சாரதி அனுமதிப் பத்திரம்

மேலும், பரீட்சார்த்திகள் தமது அடையாளத்தை உறுதி செய்யக் கூடிய விதத்தில் முகத்தை மறைக்காமலும், இலத்திரணியல் தொடர்பு சாதனங்கள் அணியவில்லை என்பதை உறுதி செய்யக்கூடிய விதத்தில் காதுகளை மறைக்காமலும் பரீட்சை மண்டபத்திற்குள் நுழைய வேண்டும். தமது அடையாளத்தை உறுதி செய்ய மறுக்கும் எவரையும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கக்கூடாது. மேலும், பரீட்சை மண்டபத் திற்குள் நுழைந்ததிலிருந்து பரீட்சை முடிந்து வெளி யேறும் வரை, உங்கள் முகத்தையோ அல்லது காது களையோ மறைக்காமல் இருக்க வேண்டும்.

14. பரீட்சை நடத்துதல் மற்றும் முடிவுகளை வெளியிடுதல் தொடர்பாகப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டவிதிகளுக்குப் பரீட்சார்த்திகள் உட்பட்டவர்கள் ஆவார்கள். அவ்விதிகளை அவர் மீறினால், அவர் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு உள்ளாக நேரிடும்.

15. இவ் அறிவித்தலில் உள்ளடங்காத ஏதேனும் ஒரு விடயம் தொடர்பாக முடிவெடுக்கும் அதிகாரம் அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பணிப்பாளர் வசமாவதோடு சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலமான அறிவித்தல்களில் ஏதேனும் இணக்கமற்ற தன்மை ஏற்பட்டால் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள அறிவித்தல் ஏற்புடையதாகும்.

எஸ். என். அக்குரந்திலக்க
அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும்
சேவைகள் பணிப்பாளர்.

அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும்
சேவைகள் திணைக்களம்,
மாஹேனவத்த,
பிட்டிபன,
ஹோமாகம,
2026.07.24.

08-40